# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள்
## (திருத்தம்)

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்
2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

---

(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **214 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : 5.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2**: இவ்வாசகம், 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்துக்கான அட்டவணையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தினதும் 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தினதும் ஏற்புடைமையிலிருந்து இனங்காணப்பட்ட செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு விலக்களிப்பதுமாகும்.

## செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தம்)

*ச.வ.ஓ. 11/2013*

### 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2013 சனவரி 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்துக்கான அட்டவணையின் திருத்தம்.*

**2.** 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்துக்கான அட்டவணையின் 10 ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"11. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்

12. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்."

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம் 15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான *சந்தாப்பணம்* அத்தியட்சகர், *அரசாங்க* வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம்,* இல. *163, கிருலபனை மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்